IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.148/2022

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAN |
| FATHER'S NAME | : | BOOPATHY |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் 1–3 ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தத்தில் வசித்து வருகிறேன். தற்போது கே.வி,குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் நானும், என்னுடன் காவலர் சத்தியராஜ், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல் 11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று கொரோனா காலம் என்பதால் கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இரடைவெளி இல்லாமல் அந்த இடதத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்றளிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள். காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்த எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். சம்பவ இடத்தில் ஒரு மணி நேரம் இருந்திருப்போம். அந்த சமயத்தில் இருந்த பொதுமக்களை விசாரித்தோம். எத்தறை நபர்களை விசாரித்தோம் என்றால் 2 நபர்கள். எதிரிகளிடமிருந்து லாட்டரி சிட்டுகளை கைப்பற்றினோம். என்ன குறியீடு உள்ளதென்றால்

ஞாபகமில்லை. வேறு எதுவும்  கைப்பற்றவில்லை. காவல் நிலையம் வந்தவுடன் வாக்குமூலம் பெற்றோம் என்றால் சம்பவ இடத்தில் பெற்றோம்., சம்பவம் நடக்கவில்லை என்றும், புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றும், பொய் வழக்கு என்றும், ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் போடப்பட்ட பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.148/2022

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | SATHYARAJ |
| FATHER'S NAME | : | SIVALINGAM |
| VILLAGE | : | THIRUMANI |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் 1–3 ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருமணியில் வசித்து வருகிறேன். தற்போது சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் சிறப்பு பிரிவு தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் நானும், என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல் 11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று கொரோனா காலம் என்பதால் கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இரடைவெளி இல்லாமல் அந்த இடதத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள் மற்றும் விற்பனை செய்வதாக விசாரணையில் தெரிய வந்தது. காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். சம்பவ இடத்தில் அரை மணி நேரம் இருந்திருப்போம். அந்த சமயத்தில் இருந்த பொதுமக்கள் யாரையும்

விசாரிக்கவில்லை  எதிரிகளிடமிருந்து லாட்டரி சிட்டுகளை கைப்பற்றினோம். வழக்கின் உள்ள 3 எதிரிகளை மட்டுமே காவல் நிலையம் அழைத்து வந்தோம். காவல் நிலையம் ைஅழுத்து வந்த பிறகு தான் கையொப்பம் வாங்கினோம். எதிரிகளிடமிருந்து என்ன கைப்பற்றினோம் என்றால் துண்டு சீட்டு, மற்றும் பேனா. எதிரியிடமிருந்து எந்த வழக்கு சொத்து கைப்பற்றவில்லை என்றும், கொரோனா காலம் என்பதால்  புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றும், பொய் வழக்கு என்றும், ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் போடப்பட்ட பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 08.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU  Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.